**செய்தித்தாள் விளம்பரம்**

**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை**

**சட்டப்பணி தன்னார்வலர்கள் (PLVs) தேர்வு அறிவுப்பு**

மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, சென்னை மாவட்டத்தில் உள்ள காவல் நிலையங்களில் காணாமல் போன குழந்தைகள் தொடர்பான வழக்குகளில் உதவி புரிய 'சட்டப்பணி தன்னார்வலர்கள்' (Para Legal Volunteers) தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

**தகுதிகள் :**

- **கல்வித் தகுதி :** குறைந்தபட்சம் 12-ஆம் வகுப்பு (Plus Two) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். சமூகப்பணி அல்லது உளவியல் தொடர்புடைய பிரிவுகளில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- **வயது வரம்பு:** 25 முதல் 65 வயதிற்குள் இருக்க வேண்டும்.
- ஆசிரியர், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சேவை மனப்பான்மை கொண்ட நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

**பணித் தன்மை:** தேர்வு செய்யப்படும் தன்னார்வலர்கள் சென்னைக்கு உட்பட்டு அந்தந்தப் பகுதி காவல் நிலையங்களில் காணாமல் போகும் குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பான தகவல்கள் புகார்கள் வரும்போது, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்க வேண்டும்.

**மதிப்பூதியம்:** அரசு விதிகளின்படி, ஒரு வருகைக்கு (Visit) ரூ. 1000/- மதிப்பூதியமாகவும் ஒரு வழக்கிற்கு அதிகபட்சமாக ரூபாய் 5000/- மட்டும் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

மேற்கூறிய வகைகளின் தகுதியுள்ள நபர்கள் தங்களின் கல்விச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்று நகல்களுடன், சுய விவரக் குறிப்பை வருகின்ற 25.05.2026 மாலை 05.30 மணிக்குள் நேரிலோ அல்லது பதிவு தபால் வழியாகவோ விண்ணப்பிக்கலாம்.

- விண்ணப்பத்தினை சென்னை மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும்

  htt://Chennai.dcourts.gov.in/

- நேர்காணல் தேதி, இடம் மற்றும் இதர விபரங்களை விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்டுள்ள சென்னை மாவட்ட நீதிமன்றத்தின் இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பதாரர்களுக்கு தபால், குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக எந்தவொரு தகவலும் தெருவிக்கப்படமாட்டாது.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை வருகின்ற **25.05.2026** அன்று மாலை 05.30 மணிக்குள் வந்து சேர வேண்டிய முகவரி

தலைவர்/முதன்மை நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,

வடக்கு கோட்டை சாலை
ADR கட்டிடம், சென்னை – **600 104.**

**Sd/-S.P.Kavitha,**
**Secretary/Sr. Civil Judge,**
**District Legal Services Authority,**
**Chennai.**

**Sd/- S.Karthikeyan,**
**Chairman/ Principal Judge,**
**District Legal Services Authority,**
**Chennai.**

விண்ணப்பதாரர்
புகைப்படம்
சுய
சான்றொப்பம்
இடவும்

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை

## தன்னார்வ சட்டப்பணியாளர்களுக்கான விண்ணப்ப படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2 | தகப்பனார்/கணவர் பெயர் | : | |
| 3 | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4 | பாலினம் | : | |
| 5 | கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதி | : | |
| 6 | நிரந்தர முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | : | |
| 7 | காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | |
| 8 | இதற்கு முன் தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை செய்த அனுபவம் உள்ளதா?<br>ஆம் எனில் அதன் விவரம்<br><br>(வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 9 | தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை/பணி புரிய விருப்பமுள்ள இடம் | : | சென்னை /எழும்பர் / சைதாப்பேட்டை / ஜார்ஜ் டவுன் |

தன்னார்வ சட்டப்பணியாளருக்கான கடமை சேவை மட்டுமே, உத்தியோகம் இல்லை, இந்த பணி முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை ஊதியம் எதுவும் இல்லை. சேவைக்கு தகுந்த கௌரவ ஊதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்